**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.59/2024 - PW-6**

| | |
|---|---|
| Name | திரு. பரத்குமார் |
| Husband/Father Name | தேவன் |
| Village /Area | மின்னல் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | தனியார் நிறுவன ஊழியர் |
| Age | 23 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 22.09.2025.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். இறந்தவர் எனக்கு சித்தப்பா மகன். 28.06.2021 அன்று மதியம் சுமார் 1.45 மணிக்கு என் அண்ணன் பஸ்வான் என்பவரை ஆவதம் பெட்ரோல் பங்க் பின்புறம் கொலை செய்து விட்டதாக என் பெரியம்மா அழுது கொண்டிருந்தார். அவரை 6 நபர்கள் அடித்து கொலை செய்து விட்டதாக கூறி அழுது கொண்டிருந்தார். மேற்கண்ட என் அண்ணனை கொலை செய்த நபர்கள் அன்பரசு, சூரியமூர்த்தி, புஜ்ஜி, அஜித், சிவா, விக்ரம் இவர்கள் தான் என்று அங்கிருந்தவர்கள் கூறினார்கள். சம்பவ இடத்தை அரக்கோணம் கிராமிய காவல் ஆய்வாளர் பார்வையிட்டு என் முன்னிலையிலும் எனது குடும்ப உறுப்பினர்கள் முன்னிலையிலும் பார்வையிட்டார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரிலுள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அது **அதசா.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அதன் பிறகு போலீசார் சம்பவ இடத்திலிருந்த இரத்தம் தோய்ந்த மண் சிறிதளவும் இரத்தம் தோயாத மண் சிறிதளவும் எடுத்துச் சென்றார்கள். ரீப்பர் கட்டை இரண்டும் என் முன்னிலையிலும் சாட்சி பாபு முன்னிலையிலும் கைப்பற்றினார்கள். என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் பொருட்களை தான் போலீசார் சம்பவ இடத்திலிருந்து என் முன்னிலையிலும் சாட்சி பாபு முன்னிலையிலும் கைப்பற்றினார்கள். மேற்படி கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அது **அதசா.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வழக்கு சொத்துக்கள் முறையே **சாபொ.1 முதல் சாபொ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**</u>

அசா.5 பாபு என்பவர் கையொப்பம் இட்ட பிறகு தான் நான் கையொப்பம் இட்டேனா என்றால் ஆமாம். சம்பவ இடத்தில் தான் போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார். 28.06.2021 அன்று போலீசார் என்னை விசாரித்தார்கள். நானும் பாபுவும் கையொப்பம் போடும் போது மாலை 6.00 மணி இருக்கும். போலீஸ் விசாரணையில் நான் கடந்த 2016 ம் ஆண்டு மேலாவதத்தை சேர்ந்த லோகேஷ் என்பவரை மணி, பஸ்வான், அஜித், வினோத் மற்றும் ரகு ஆகியோர் குத்தி கொலை செய்ததாகவும் அதனால் ஆவதம் காலனிக்கும் அவர்களுக்கும் முன்விரோதம் இருந்ததாக கூறியிருந்தேனா என்றால் இல்லை. அவ்வாறு கூறியுள்ள விவரம் நான் கூறியதில்லை என்று சொன்னால் சரிதான். சம்பவ இடத்தில் நான் கூறுவது போல் வழக்கு சொத்துக்களை கைப்பற்றபடவில்லை என்றும் நானும் பாபுவும் காவல் நிலையத்தில் தான் கையொப்பம் இட்டோம் என்றும் இறந்த பஸ்வான் எனது உறவினர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்

சரியல்ல. நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.09.23 18:13:47 +0545

II Additional District and Sessions Judge,
Arakkonam.